## நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

பேரிடர் தாக்குதலின் போதோ, பேரிடர் குறித்த முன் அறிவிப்பு வரும் நேரங்களிலோ, பாதிக்கப்பட்ட மற்றும் பாதிப்பு ஏற்படக்கூடிய பகுதிகளில் உள்ள மக்களை அருகில் உள்ள நிவாரண முகாமுக்கு கொண்டு செல்வதே முதன்மை பணியாகும். இது விலை மதிப்பு மிக்க மனித உயிர்களையும், அவர்களது உடைமைகளையும் பாதுகாப்பதை உறுதி செய்கிறது. மக்கள் நிவாரண முகாம் கொண்டு செல்லப்பட்டவுடன் அவர்களுக்கு அரசாங்கம் தேவையான நிவாரண உதவிகளை வழங்குவது என்பது மிக முக்கியமாகும். தமிழக அரசானது தேசிய பேரிடர் மேலாண்மை முகமையால் வரையறை செய்யப்பட்ட அளவு கோலின் படி நிவாரண முகாம்களின் தங்க வைக்கப்படும் பொது மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கி வருகிறது.

பாதிக்கப்பட்ட / பாதிப்படையக்கூடிய பொது மக்களுக்கு உடனடியாக நிவாரணம் / மறுவாழ்வு உதவிகளை வழங்குவதே பேரிடர் நிவாரணம் மற்றும் மறுவாழ்வின் முக்கிய குறிக்கோளாகும். தமிழகத்தை பொருத்தவரை நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு உணவு, அடிப்படை வசதிகள் மற்றும் உடல்நலம் பேணல் ஆகியவற்றை உறுதி செய்வதையே நிவாரண உபாயமாக கடைபிடித்து வருகிறது. பெண்கள் , குழந்தைகள், முதியவர்கள், மாற்று திறனாளிகள் ஆகியோரை தனிப்பட்ட முறையில் கையாளவும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் மனதளவில் அவர்களது மனோதைரியத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற் கொள்வதில் அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

**பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் / சூறாவளி புகலிடங்கள் / இதர நிவாரண முகாம்கள்**

இம்முகாம்களில் சமையலறை, நீர் இருப்பு மற்றும் கழிவரை வசதிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான மையங்கள் அரசு உறுதி செய்துள்ளது.

கால்நடைகளை தங்க வைக்க தனியாக புகலிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டங்கள் பள்ளியறைகள், சமுக கூடங்கள், சுய உதவிக்குழுக்களுக்கான கூட்ட அரங்கு, சமுதாய கூட்டங்கள், தொழில்முறை பயிற்சி பட்டறைகள் ஆகியவற்றை நடத்த ஏதுவான பன்முக கட்டமைப்பு வசதிகள் கொண்டவை. இக்கட்டமைப்புகள் மூலம் சமுதாய மேம்பாடு ஏற்பட உதவும்.

- கடலோர பேரிடர் அபாயக்குறைப்பு திட்டம் (ஊனுசுசுஞ) மூலம் பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இதன் மூலம் உணவு தேவையான குடிநீர்

- கடலோர பேரிடர் அபாயக்குறைப்பு திட்டம் (ஊனுசுசுஞ) மூலம் பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இதன் மூலம் உணவு தேவையான குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதாரமான கழிவறைகள் ஆகியவை தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் விழிகாட்டுதல்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மேலும் எரிப்பொருள் சேமிப்பு வசதியுடன் கூடிய மின்னாகிகள் மூலம் மின் வசதியுடன் வழங்கப்படுகிறது.
- 5 ச.மீக்கு ஒருவர் என்ற வீதத்தில் பாதுகாப்பு மையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள நபர்களுக்கு மின் விளக்கு வசதியுடன் செய்யப்பட்டு உள்ளது.
- தேவையான இடங்களில் அதிக வெளிச்சம் தரக்கூடிய மின்விளக்குகள், எமர்ஜென்சி விளக்குகள், தேடுதல் விளக்குகள் மற்றும் மெழுகுவர்திகள் ஆகியவை தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.
- முகாம்களில் தங்க வைக்கப்படுள்ளவர்களின் பாதுகாப்பை குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.,